**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-6/PW- 5 <br> Name : அபினாஷ் <br> Father's/Husband's Name : தமிழ்வாணன் <br> Nationality : Indian | Village: <br> Age :25 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.11.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது பனங்காட்டாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நானும் எனது அப்பாவும் மருத்துவமனை செல்வதற்காக மாலை சுமார் 6 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது போலிசார் சண்டை சம்மந்தமாக தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். என்னிடம் ஒரு கையொப்பம் மட்டும் கேட்டார்கள். கையொப்பம் போட்டு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது

சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 07.07.2019 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நானும் எனது அப்பாவும் சம்பவ இடத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த திருநீலக்குடி போலிசார் குற்ற எண் 108/2019 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-5/PW- 4 <br> Name : தமிழ்வாணன் <br> Father's/Husband's Name : அர்ச்சுனன் <br><br> Nationality : Indian | Village: <br> Age :64 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of** 13.11.2024

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது பனங்காட்டாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நானும் எனது மகனும் மருத்துவமனை செல்வதற்காக சென்று கொண்டிருந்தபோது போலிசார் சண்டை சம்மந்தமாக தெரியுமா என்று கேட்டார்கள், நான் தெரியாது என்று சொன்னேன். என்னிடம் ஒரு கையொப்பம் மட்டும் கேட்டார்கள். கையொப்பம் போட்டு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

என்னுடையதுதான். ( **மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 07.07.2019 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நானும் எனது மகன் அபினாஷ் என்பவருடன் சம்பவ இடத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த திருநீலக்குடி போலிசார் குற்ற எண் 108/2019 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**